REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 26௳ புதன் (8—2—56) ★ ★ வெளியூர்: தை 27௳ வியாழன் (9—2—56) [இதழ் 203

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால்:

இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்

"இஷ்டப்பட்டால் (திராவிடர்) சழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார்.

—'தினமணி': 8—2—56

உருட்டு விழியும் உலக வரலாறும்

மக்கள் சக்திக்கு பணியாத மாவீரன் இல்லை

முன் வைத்த காலைப் பின் வைக்காதவரா நேரு?

அண்ணா ஆய்வுரை

(நமது நிருபர்)

சென்னை, பிப். 8—

"உருட்டு விழி காட்டுவோர், 'முன்வைத்த காலை பின் வைக்கமாட்டேன்' என்று பேசியிருந்தால், உலக வரலாறு வேறுவிதமாக அல்லவா அமைந்திருக்கும்? இந்தியா வந்த அலெக்சாண்டர், 'முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன்' என்று கூறியிருந்தால், நாமெல்லாம் இன்று கிரேக்க ஆட்சியின் கீழல்லவா இருந்திருப்போம்!"

அண்ணா அவர்கள் இப்படியெல்லாம் ஆய்வுரை வழங்கினர், சென்னை—மண்ணடியில் நடைபெற்ற மாநில மாநாடு நிதியளிப்புக் கூட்டத்தில்!

"பண்டித நேரு என்ன, இதற்குமுன் முன்வைத்த காலை பின்வைக்காதவரா? காஷ்மீரிலே அவர் வைத்த தங்கக் கால் என்ன ஆயிற்று? ஆந்திரம் எப்படி அமைந்தது?"

கேள்விக் கணைகளைத் தொடுத்து, 'நேரு பண்டிதரின் வீராப்பு வெறும் கேலிக்கூத்து' என்பதை விளக்கினர், அண்ணா, அங்கு!

அவரது பேருரையின் ஒரு பகுதியை நேற்று தந்தோம்; மறு பகுதி இன்று தரப்படுகிறது; இன்னும் முடியவில்லை—தொடர்ந்து நாளை தரப்படும்:—

"இந்த வட்டார தி. மு. கழகத் தோழர்கள் திருச்சியில் நடைபெறவிருக்கும் இரண்டாவது மாநில மாநாட்டிற்குத் தங்களாலான நிதியாக ரூ. 100 தந்திருக்கிறார்கள்; அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

"கூட்டம் நடத்துவது பற்றி என்னிடம் வந்து கேட்டபோது, கடற்கரையில் நடத்துமாறு கூறினேன்; ஆனால், இந்த வட்டாரத் தோழர்கள், கூட்டம் இந்த வட்டத்திலேயே நடைபெற்றால் நல்லது என வட்டாரத் தோழர்கள் ஆசைப்படுவதாகக் கூறினார்கள். அவர்களது ஆசையினால், உங்களை இந்த நெருக்கடியான இடத்தில் கூட்டியிருக்கிறார்கள்; உங்களுக்கு மட்டுமல்ல நெருக்கடி—போலீஸ் இலாகாவிற்கும் பெரிய நெருக்கடி ஏற்படுத்திவிட்டார்கள்; அதற்காக நான் வருந்துகின்றேன்.

"இந்த வட்டாரத்திலேயே கூட்டம் நடைபெற வேண்டுமென விரும்புவது வரவேற்கத்தக்கது தான்; இந்த வட்டாரத்தில் வசிப்பவர்கள் பெரும்பாலோர் நம்மீது அச்சம் கொண்டவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்; ஆனால், இங்கேயே கூட்டம் நடைபெற வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுவதாகக் கேள்விப்பட்டதும், 'நாட்டில் வேகமாக ஏற்பட்டு வரும் மனமாறுதலில் இதுவும் ஒன்று' என்று எண்ணி மகிழ்ச்சியுற்றேன்.

"நமது கழகத்தின் நடவடிக்கையைப் பற்றி அச்சமும் அருவெறுப்பும் கொண்டவர்கள் நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளாத வரையில் — அறிந்துகொள்ளாத வரையில்தான் அப்படி எண்ணம் கொண்டிருப்பார்கள்; நம்முடைய கொள்கையை, நாம் விளக்கக் கேட்டால், நமது கோரிக்கையில் உள்ள நியாயத்தை அவர்கள் ஒப்புவார்கள்; நமது வாதத்தில் உள்ள 'சத்தியத்தை!' உணருவார்கள்; நமது கொள்கையில் உள்ள 'நேர்மை'யை அறிவார்கள்.

"கடந்த ஜனவரி 28-ந் தேதி அன்று, 'ஆங்கிலமே பொதுமொழியாக இருக்க வேண்டும்' என்று வலியுறுத்துவதற்காக ஆச்சாரியாரும், பெரியாரும், இதரர் பலரும் கலந்துகொண்ட ஒரு தனி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் முதலமைச்சராயிருந்து ஓய்வு பெற்றிருக்கிற ஆச்சாரியார், 'ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும்' என்பதற்கான காரணங்களை விளக்கினார். உபச்சாரத்திற்காகக் காரணங்களை எடுத்துக் கூறினார் என்று கூறுகிறேன். உண்மை நிலையைச் சொல்லவேண்டுமானால், இது நான்வரை நாம் இந்திகூடாதென்பதற்காக என்னென்ன காரணங்களைக் கூறினோமோ, அந்தக் காரணங்களை ஒப்புக்கொண்டார்.

"அந்த மாநாடு முடிந்து, நாங்கள் எல்லாம் கலைந்து வெளிவரும் போது, நான் ஆச்சாரியாரைப் பார்த்து ஆண்டுகள் 20-ஆகி விட்டன; இந்த 20 ஆண்டுகளில் அரசியலில் எத்தனையோ நிகழ்ச்சிகள், மாற்றங்கள், நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன; என்னை அவர் அடையாளம் காண முடியவில்லை; பக்கத்திலிருந்த நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள், ஆச்சாரியாரிடத்தில், 'இவர் யார் தெரிகிறதா? இவர்தான் அண்ணாதுரை', என்று அறிமுகப்படுத்தி வைத்தார்; அதைக் கேட்ட ஆச்சாரியார், ஒரு ஐந்து நிமிடம் என்னையே ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'இவரா? அண்ணாதுரையா?' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

"வாலிபப் பருவத்தில், மாப்பிள்ளை இன்னாரென்று தெரிவிக்காமல் பெண் பார்க்கப் போவது உண்டு—இந்தக் காலத்தில் அல்ல; இந்தக் காலத்தில், மாப்பிள்ளையும்-பெண்ணும் இரு வீட்டாருக்கும் தெரியாமல் எத்தனையோ முறைகள் சந்தித்துக் கொள்கிறார்கள் (சிரிப்பு); நான் சொல்லுவது அந்தக் காலத்தில்; — 'கர்நாடகக் காலத்தில்; மாப்பிள்ளையும், இதரருடன் பெண் பார்க்க உட்கார்ந்திருப்பார்; பெண்ணுக்குத் தெரிவிக்கமாட்டார்கள் — 'இவர்தான் மாப்பிள்ளை' என்று; ஏனெனில், அப்போதுதான் கூச்சம் இல்லாமல் பாட முடியும் என்பதற்காக!

"பெண் பார்க்கும் நிகழ்ச்சி முடிந்ததும் உள்ளே சென்ற பெண்ணிடம், பெண்ணின் தாயாரோ, மற்றவரோ கேட்பார்கள்'—'நீ பாடிக்கொண்டிருக்கும் போது, எதிர்த்தாற்போல தாளம் போட்டுக்கொண்டு ஒருவர் உட்கார்ந்திருந்தாரே, அவரைப் பார்த்தாயா? அவர்தான் உனக்கு வரப்போகும் மாப்பிள்ளை' என்று! அப்போது பெண், 'அவரா? வலது பக்கம் உட்கார்ந்திருந்தாரே அவரா? மாப்பிள்ளையா?'-என்று, ஆச்சரியத்தோடு கேட்பாள்; அது போல ஆச்சாரியார், என்னைப் பார்த்ததும், 'இவரா? அண்ணாதுரையா?'—என்று ஆச்சரியத்தோடு கேட்டார் (சிரிப்பு).

"'நீதானா அண்ணாதுரை? நான், அண்ணாதுரை என்றால், பிரம்மாண்டமான— பயங்கரமான மனிதனை அல்லவா எதிர்பார்த்தேன்?' என்று ஆச்சாரியார் கூறியதை நான் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால்; பார்ப்பன குலத்திலேயே பெரிய மேதை—இந்தியாவிலேயே வேத வேதாந்த விசாரணையில் வல்லவர் என்று புகழப்படும் ஆச்சாரியார், என்னைப் போன்றவர்களைப் பயங்கரமானவர்களாகக் கற்பனை செய்துகொண்டிருந்திருக்கிறார்; நேரில் பார்த்ததும் சமாளித்துக்கொண்டு, 'நீதானா?' என்று ஆச்சரியப்படுகிறார்!

"அவர் முதன் மந்திரியாயிருந்த காலத்தில்தான் நாம் நாட்டில் ஓடுகிற இரயில்களை எல்லாம் ஒருநாள் நிறுத்தினோம்; அதனால் ஒருவேளை அண்ணாதுரை என்றால், 60 அடி உயரத்தில் 40 அடி அகலத்தில் ஒரு பிரம்மாண்டமான மனித உருவமாக—ஓடிவரும் இரயிலின் எஞ்சினை அப்படியே இருகரங்களாலும் அணைத்து நிறுத்திவிட்டதாக எண்ணிக் கொண்டாரோ, என்னவோ? ஆச்சாரியாரே நம்மைப் பற்றி அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார் என்றால், சாதாரண பார்ப்பன நண்பர்கள் நம்மைக் கண்டு அச்சம் கொள்வது ஆச்சரியத்திற்கு உரியதல்ல! பார்ப்பன நண்பர்கள், நாம் நமது கொள்கைகளைக் கூறக்கேட்டபின் அச்சத்தை விடுத்து, அருவெறுப்பை நீக்கி, தோழமை உள்ளம்கொண்டவர்களாவர் என்று நம்புகிறேன்.

"நமது கொள்கைகள் ஒன்றும் மின்சார வேகமுடையவை அல்ல—தொட்டால் துவண்டுவிட! நம்மிலிருந்து தூர இருந்தால்தான் அவர்களுக்குத் தொல்லை!

"நான் இன்று இங்கு பேசிக்கொண்டிருக்கும் இதே நேரத்தில், தமிழரசுக் கழகத் தலைவர் நண்பர் சிவஞானம் அவர்கள் நிலவர் கட்டத்தில் பேசிக்கொண்டிருப்பார்; கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஜீவானந்தம் அவர்கள் நகரின் வேறு பகுதியில் பேசிக்கொண்டிருப்பார்; இப்படிச் சாதாரண நாட்களில் நாங்கள் தனியாகப் பேசிக்கொண்டிருந்தால், ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக்கொண்டிருப்போம்;

"யாரும் எதிர்பாராததும், ஆட்சியாளர் அச்சுறுத்துவதும், நாட்டின் மூலாதார கோட்பாடுகளையுணர்ந்தவர்கள் மகிழவும் ஆன வகையில் ஒரு நிலை உருவாகியிருக்கிறது. எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்துள்ளனர் ஒரு பிரச்சினைக்காக; இந்தக் கூட்டணி கண்டு அஞ்சுபவர்களாகக் கோட்டையில் சிலரும், கொடி மரத்தடியில் சிலரும், வேறு சிலர் களத்திற்கு வருவதற்கு காலம் பார்த்திருப்பவர்களாயுமிருக்கின்றனர்.

"இந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் அரசியல் நிலைகளைத் தெளிவாக அறிபவர்கள் என்பதால், இங்கு எல்லாக் கட்சியினரையும் ஒன்றுபடுத்தியுள்ள தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினையின் அடிப்படை குறித்து விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்; பிரச்சினையை ஒட்டி எழுந்துள்ள நிலைகளை மட்டும் விளக்க விரும்புகிறேன்.

"'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடனா அல்லது கேரளத்துடனா இணைவது?' என்பது குறித்து அங்குவாழும் மக்களிடை ஒரு வாக்கெடுப்பு நடத்துவதுதான் நியாயமானதாகும்; அதற்கு நேரு தயாரா? அதை விட்டு, முன்வைத்த காலை பின் வைக்க மாட்டேன் என்று பிடிவாதம் பேசினால்—'நான் சொல்லி விட்டேன்; ஏற்றுக்கொள்ளத்தான வேண்டும்' என்று சர்வாதிகாரம் பேசினால், 'பண்டித நேரு அவர்களே! இரத்தக் கறை படிந்த வரலாற்றுச் சுவடிகளைத்தான் நாங்கள் உங்களுக்குக் காட்ட முடியும்; வாதங்கள் உங்களுக்கு புரியவில்லை என்றால் வரலாற்றைத்தானே காட்ட முடியும்?'

"பண்டித நேரு இன்று எவ்வளவு உயர்ந்திருக்கிறாரோ—அவரை விட உயர்ந்தவனாயிருந்தான், சீன நாட்டுச் சர்வாதிகாரி சியாங்கே-ஷேக்! எங்கே இப்போது அந்த சியாங்கே-ஷேக்? பார்மோசாத் தீவில், நடுத்திட்டில் அகப்பட்ட நரிக்குட்டிபோல் திண்டாடிக் கொண்டிருக்கிறான். சுற்றியிருக்கும் கடலில் ஏதேனும் கப்பல்கள் வருகின்றனவா? உயரே விமானங்கள் ஏதேனும் வட்டமிடுகின்றனவா? —என்று அஞ்சிக் கிடக்கிறான். 'சீன நாட்டுச் சர்வாதிகாரியாயிருந்தபோது நமது மேனி எப்படி இருந்தது—இப்போது எப்படி இளைத்துப் போய்விட்...

(4-ம் பக்கம் பார்க்க)

தட்சிணப்பிரதேச பிரச்சினை

தனி மாநாடு வேண்டும்

பொதுச்செயலாளருக்கு அண்ணா வேண்டுகோள்

"தட்சிணப் பிரதேச யோசனையை, நாட்டிலுள்ள சகல முற்போக்குக் கட்சிகளும் எதிர்த்திருந்தும், காமராசர் சர்க்கார் தட்சிணப் பிரதேச யோசனையை ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர்.

"சில காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள், தட்சிணப் பிரதேச யோசனைக்கு ஆதரவுக் கையொப்பம் வாங்கி வருகிறார்கள் என்று தெரிகிறது.

"அதுபோலவே, சில காங்கிரஸ்காரர்களைக் கொண்டு, தட்சிணப் பிரதேச ஆதரவு மாநாடு நடத்தவும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

"எனவே, தட்சிணப் பிரதேச யோசனையை எதிர்த்தொழிக்கும் நோக்கத்தை விளக்கி மக்கள் சக்தியைத் திரட்ட, ஓர் தனி மாநாடு, தாங்கள் ஈடுபட்டுள்ள சர்வ கட்சி கூட்டணி சார்பிலேயே உடனடியாக நடத்துவது அவசர அவசியம் என்று பல நண்பர்கள் எனக்கு அறிவித்திருக்கிறார்கள்; எனவே, இந்த வேண்டுகோள்.

"இந்த என் வேண்டுகோளுக்கேற்ப காரியமாற்ற, சர்வ கட்சி கூட்டணியில், பொது வேலைநிறுத்தத்துக்குப் பிறகு ஏற்பாடுகள் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்"

என்று, பொதுச்செயலாளருக்கு அண்ணா அவர்கள் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—2—'56 புதன்

சர்வ கட்சி கூட்டணி

இந்தியப் பேரரசின் சார்பில் இந்தியப் பிரதமர் நேருவால், தமிழர்களுக்கு இழைக்கப்பட்டப் பெரும் கேட்டினைத் துடைக்க, தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டுள்ளனர். அவர்கள் தம் அமைப்புக்கு 'சர்வ கட்சிக் கூட்டணி' எனப் பெயரிட்டுக் கொண்டுள்ளனர்.

அக்கூட்டணியில், குறிப்பிடத்தகுந்த அரசியல் கட்சிகளில் காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் தம்மிச்சையாகப் பங்கு கொண்டுள்ளன. ஒரு கட்சியை மற்றொரு கட்சி அச்சுறுத்தியதாலோ, ஆசை காட்டியதாலோ இக்கூட்டணி உருவெடுக்கவில்லை என்பது தெளிவு.

தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள கேடும், அதைக் களையப் பட வேண்டியதின் இன்றியமையாமையும், ஒரே கூட்டணியில் ஒருங்கு சேருவதற்கு அரசியல் கட்சி அனைத்துக்கும் ஊக்கமளித்தன. இந்த அரிய ஒற்றுமை தமிழர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் வேறு பல பொதுப் பிரச்சினைகளில் பரிகாரம் தேடுவதற்கும் பயன்படும் என்றே நாம் நம்புகிறோம்.

ஒன்றுக்கொன்று முரண்படும் கோட்பாடுகளைக் கொண்டு இயங்கிவரும் அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட ஒரு பிரச்சினைக்காக ஒன்றுபடுவது என்பது எளிதில் நிறைவேறக்கூடியதன்று; துவக்க முயற்சியிலேயே வெற்றிபெறக் கூடியதுமன்று. விடா முயற்சிக்குப் பின்னர் சிறந்த முறையில் போராற்றல் படைத்தப் பெரியதோர் அமைப்பாக உருவெடுத்திருக்கிறது, சர்வகட்சிக் கூட்டணி. அக்கூட்டணியைக் காண, விடாது முயற்சித்து வந்த அனைவரும் தமிழர்களின் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

முயற்சி வீண் போகவில்லை; மகத்தான வெற்றி ஏற்பட்டு இருக்கிறது; சர்வ கட்சிக் கூட்டணியாகக் காட்சி அளிக்கிறது.

'முயற்சி முறிந்தொழிய வேண்டும்' எனக் கெடு நினைப்புக் கொண்டிருந்தவர்களின் குருதி கொதிப்பேறும் வகையில், சர்வ கட்சிக் கூட்டணி 'விஸ்வரூபம்' எடுத்திருக்கிறது. அக்கெடுமதியாளர்களும் வெட்கித் தலைகுனிந்து, மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பும் சதிச் செயலை மேற்கொண்டும் உள்ளனர்.

தட்சிணப்பிரதேசம்—அங்கு தமிழர் — கன்னடர்—மலையாளத்தார் அனைவரும் கூட்டாக நின்று வாழ்வு பெறக்கூடும்—என்று அக்கெடுமதியாளர்கள் பேசக் கிளம்பியுள்ளனர். 'அது ஒரு ஆபத்தான ஏற்பாடு; மொழிவழியினரை மாய்க்கப் பின்னப்படும் சிலந்திக் கூடு' என சர்வகட்சிக் கூட்டணி, அச்சதித் திட்டத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டி இருக்கிறது.

வருகிற பிப். 20-ந் தேதியை 'பொது வேலை நிறுத்த நாள்' ஆக சென்னை மாகாணம் முழுவதிலும் வாழ்ந்து வரும் தமிழர்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி இருக்கிறது. அம்மகத்தான வேலை நிறுத்தம் நூற்றுக்கு நூறும் வெற்றி பெறும் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

ஆளும் காங்கிரஸ் கட்சியினர், அப்பொது வேலை நிறுத்தத்தை தோற்கடிக்க மூர்க்கத்தனமாக முயற்சிப்பர். ஆனால், அச்சிறு செயலை, காங்கிரஸ் கட்சியை விடத் தமிழர்களின் நல்வாழ்வு உயர்ந்தது — விரும்பத்தக்கது என உறுதியாக நம்பும் காங்கிரஸ் தமிழர்கள் மறந்தும் செய்ய முன்வரமாட்டார்கள். பொது வேலை நிறுத்த வெற்றிக்கே, அக்காங்கிரஸ் தமிழர்களின் வாக்கும் செயலும் இருந்திடும் என்பது திண்ணம்.

அத்தகு நற்குணம் வாய்ந்தவர்கள்—தமிழர் நலம் தேடுபவர்கள் — தமிழருக்கு இடுக்கண் ஏற்படுவது கண்டு மனம் பதைபதைப்பவர்கள், இன்றும் காங்கிரசில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பேராதரவு பொதுவேலை நிறுத்தத்திற்கு இருக்கத்தான் இருக்கும்.

சர்வ கட்சி கூட்டணி உருவாவதை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென்பது காங்கிரஸ் ஆளவந்தார்களின் உள்ளக்கிடக்கை; ஆனால் அவர்களை நாணித் தலைகுனியச் செய்துவிட்டது, சர்வ கட்சிக் கூட்டணி.

கூட்டணியின் பொது வேலை நிறுத்தக் கோரிக்கைக்கு, வேறு எந்தக் கோரிக்கைக்கும் ஏற்படாத ஓர் மகத்தான வெற்றி காத்துக்கொண்டு இருக்கிறது. அன்று ஒரு நாள் காலை முதல் மாலை வரை, சென்னை மாகாணம் முழுவதிலும் அமைதி நிலவப் போகிறது.

தொழில்—அது எதுவானாலும் ஓய்வு கொள்ளப்போகிறது. அலுவல்துறை—அது எதுவானாலும ஆடாது, அசையாது நிலை நிற்கப்போகிறது.

போக்குவரத்து நிற்கும்—தொழிலாளர் வேலைக்குச் செல்லாது இருப்பர்—பள்ளிகள் மூடிக்கிடக்கும்—கடைகள் கதவடைத்துக்கிடக்கும். அவ்வளவும் கட்டாயத்தினால் அல்ல—தம் தம்மிச்சையாக!

தங்களுக்கு, இந்தியப் பேரரசின் பெயரால் இந்தியப் பிரதமர் புரிந்துள்ள கேடு எத்தகையக் கொடுமையானது—அது கண்டு தாங்கள் எத்தகைய வேதனைக் கொண்டுள்ளனர்—என்பதை, முதலமைச்சர் கனம் காமராசர் காண. பொதுவேலை நிறுத்தத்தைத் தமிழர்கள் திறம்படச் செயலாற்றிக் காட்டத்தான் போகின்றனர். பொது வேலை நிறுத்தத்தின் மூலம் வெளியாகும் தமிழர்களின் சோகத்தை—கோபத்தை, இந்தியப் பிரதமர் வன்னெஞ்சில் தைக்கும் வகையைக் கனம் காமராசர் செய்ய வேண்டும். முதலமைச்சராக இருந்து, அவர் தமிழர்களுக்குச் செய்த துரோகத்திற்கு ஏற்ற தோர் கழுவாய் அதுவே ஆகும்.

சர்வகட்சி கூட்டணி வாழ்க! அதன் கோரிக்கை வெற்றி பெறுக!

***

தலைமைக் கழகம் : அறிக்கை—3/56

சர்வ கட்சிக் கூட்டணி

கழகத் தோழர்கள் கவனிக்க!

★

★ தட்சிணப் பிரதேச அமைப்பு எண்ணத்தை எதிர்ப்பது.

★ தமிழகத்தின் எல்லையை ஒட்டிப் பிற மாநிலங்களோடு சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்பது.

★ புதிய தமிழ் மாநிலத்தை (இராஜ்யத்தை) உருவாக்குவது.

★ சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரேற்படுத்துவது.

என்ற கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சர்வ கட்சிக் கூட்டணியைச், சிதம்பரத்தில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் வரவேற்று ஆதரவு தந்துள்ளது.

பொதுக் குழு முடிவுக்கு ஏற்பச், சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பாக வெளிவரும் அறிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான பணிகளை, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட கொள்கைகளை ஏற்குமாறு அரசியலாரை வற்புறுத்த, பிப். 20-ம் நாளை கடை அடைப்பு—பொது வேலை நிறுத்த நாளாகத் தமிழக மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று சர்வ கட்சிக் கூட்டணி முடிவு செய்ததற்கிணங்க, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பிற கட்சிகளோடும், அமைப்புகளோடும் இணைந்து நின்று, எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று, பிப். 20-ம் நாள் கடை அடைப்பு—பொது வேலை நிறுத்தத்தை அமைதியான முறையில், பலாத்காரத்துக்கு இடமற்ற வகையில், யாதொரு கேடும், சொத்து நாசமும் ஏற்படாத வழியில், யாருக்கும் தீங்கு ஏற்படாத முறையில் வெற்றிகரமாக நடத்திக்காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பிற கட்சிகளின் ஒத்துழைப்பை எந்தெந்த முறையான வழிகளில் பெற இயலுமோ, அந்தந்த வழிகளில் முயன்று, பொது வேலை நிறுத்தத்தைச் சிறப்பாக நடத்திக் காட்டுமபடி தி. மு. கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பாக அனுப்பிவைக்கப்பெறும் சுவரொட்டிகளை ஆங்காங்கு ஒட்டியும், வேண்டுகோள் அறிக்கைகளைப் பரப்பியும் கடையடைப்பு—பொது வேலை நிறுத்தத்திற்கு ஆக்கம் அளிக்கும்படி கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

"அறிவகம்"
சென்னை-13
7—2—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

***

'தனியரசு பெற தகுதியுள்ளவராகிவிட்டோம்'

முதலமைச்சர் முழக்கம்

சிங்கப்பூர், பிப். 6—

"சிங்கப்பூர் மக்கள், தனியரசு பெறுவதற்குத் தகுதியுள்ளவராகிவிட்டனர்; தனியரசு கிடைக்காமல் செய்வதற்கு சில பண முதலைகளும், இராணுவத்தினரும் முயன்றுகொண்டுள்ளனர். அடுத்த ஏப்ரலில், லண்டனில் நிகழவிருக்கும் பேச்சு வார்த்தைகள் மூலமாக சுயாட்சி கிடைக்காமல் தடைபடலாம்; இதனால் எனது சர்க்காருக்கு அபாயம் ஏற்படலாம்.

"'காலனி ஆதிக்கக் கட்டை வண்டி'யை இழுக்கும் மாடுகளாக இருப்பதற்கு இனி நாங்கள் ஒருப்படமாட்டோம்! விடுதலை பெற்று சுயாட்சி நடைபெறுவதற்காக நாங்கள் சட்டரீதியாக முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் மனிதர்களே அன்றி குரங்குகள் அல்ல' என்பதை பிரிட்டிஷ்காரர்கள் உணருகிறார்கள் என்று நம்புகிறேன்" என்று சிங்கப்பூர் முதலமைச்சர் டேவிட் மார்ஷல, பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டுள்ளார்.

இடைநிலை பள்ளிகளுக்கு மானியம் வழங்கப்படும்?

இடைநிலைப் பள்ளிகளில் விஞ்ஞானப் பாடங்கள், மற்றும் முக்கியமான பாடங்களில் பயிற்சியளிப்பதற்காக 'ஸ்தல ஸ்தாபனங்கள்', 'பிரைவேட் மானேஜ்மெண்ட் செகண்டரி பள்ளி'களுக்கு முன்னதாகவே மானியம் வழங்குவதற்கு உத்தரவிடும் கல்வி இலாகா 'டைரக்டா' திட்டத்திற்கு சென்னை சர்க்கார் இசைவு தந்துள்ளார்களாம். விஞ்ஞானத்திற்கு ரூ. 20,000; முக்கியப் பாடங்களுக்கு ரூ 7,500 அளிக்கப்படுமாம்.

மாநில இணைப்புக்கு கம்யூனிஸ்டு எதிர்ப்பு

புதுடில்லி, பிப். 6—

மாநிலங்களின் இணைப்பை எதிர்த்தும், அந்த யோசனையை உடனே 'வாபஸ்' பெறும்படி வற்புறுத்தியும், கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் குழு, ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதாம்.

***

இரயில்வே அபிவிருத்தித் திட்டங்கள்

புதுடில்லி, பிப். 5—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி நகலில் சுமார் ரூ. 1,384 கோடி போக்குவரத்தற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதாம 850 மைல புதிய இரயில்பாதைகள் அமைப்பு; 2,258 இரயில் 'எஞ்சின்'கள்—1,07,247 வாகன்கள்—12,391 கோச்சுகள் வாங்குதல்—8,000 மைல் இரயில்பாதை புதுப்பிக்கப்படுதல் ஆகியவைகள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரயில்வே அபிவிருத்தியின் முக்கிய திட்டங்களாம்.

தோல்வி மேல் தோல்வி!

பெல்காம், பிப். 6—

கோவா சட்ட சபையில் சென்ற வாரம் கோவா சர்க்காருக்கு இரண்டாவது முறையாக தோல்வி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அரிசி உற்பத்தி விலை நிர்ணயம், சமுதாய நிலங்களைக் குத்தகைக்கு விடுதல் பற்றிய நிர்ணயம் சம்பந்தமாகச் சர்க்கார் தரப்பில் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாம்

ஏற்கனவே, சென்ற டிசம்பர் திங்களில் சர்க்கார் 'பட்ஜெட்' கூட்டத்தின்போது சட்ட சபையில் தோல்வி ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

'பொது வேலை நிறுத்தம் வெற்றிபெற செய்யுங்கள்'

தமிழ்ப் பேரவைத் தலைவர் கஜபதியார் வேண்டுகோள்

"தமிழகத்தின் ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும்; தமிழகத்தின் பகுதிகள் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டும; 'சென்னை ராஜ்யம்' (மதராஸ் ஸ்டேட்) என்பதை மாற்றித் 'தமிழ் நாடு' என அழைக்க வேண்டும; 'தட்சிணப் பிரதேச' அமைப்பு தமிழகத்தில் ஏற்படாமல் இருக்க வேண்டும. இவைகளுக்காகத் தொண்டு செய்து வருகின்ற தமிழர் பேரவையானது, தமிழ்நாட்டின் பல கட்சிகளின் கூட்டமைப்புத் தலைவராகிய திரு. பி. டி. இராசன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, வருகிற 20-2-56 அன்று பொது வேலைநிறுத்தம, நாடு முழுவதும் செய்ய வேண்டுமென்று தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதோடு, தமிழர், தமிழ் மொழியின் நலங்கருதியும், உழைத்து வருகின்ற தமிழ்ப் பெருமக்கள் அனைவரையும் தலைவர் பி. டி. இராசன் அவர்களின் எதிர்கால அறிவிப்புகளுக்குக் கட்டுப்பட்டுத் தொண்டு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது."

—இவ்வாறு, தமிழர் பேரவைத் தலைவர் திரு. ஆ. சபாபதி எம்.எல்.சி. அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

சிறுபான்மையினர் வெளியேற்றம்

டாக்கா, பிப். 6—

கிழக்கு வங்காளத்திலிருந்து சிறுபான்மையினர் வெளியேற்றம் ஜன. 31-ந் தேதியோடு முடிந்த இரண்டு வாரங்களில் உச்சநிலையை அடைந்துவிட்டதாம்; அவ்விரு வாரங்களில் 24,922 பேர் வெளியேறியுள்ளனராம்.

'அவசர சட்டம்' பிறக்கிறது!

பம்பாய், பிப். 6—

உறுப்பினர்களின் 'இராஜினாமா' காரணமாக எழும்பியுள்ள நிலைமையை ஒட்டி உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கு பம்பாய் கவர்னர் ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளாராம்.

செய்திச் சுருள்

★

வாண்டராம்பாளையம் கிராம முன்னேற்ற சங்கப் பொதுக்கூட்டம்

5—2—56 மாலை 6 மணிக்கு, வாண்டராம் பாளையம் கிராம முன்னேற்ற சங்கச் சார்பில், சங்கத் திடலில், திரு. மா. வேஷ்க்தாவுத் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அன்பில் எ. பி. தருமலிங்கம், ஒய் தேவதாஸ், கே எ. குமரவேல்; அ. பொன்னம்பலனார், எம். பழனியாண்டி, எம் எல் எ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சிலம்பு நாடக மன்ற துவக்கம்

சென்னை, பிப். 7—

15—1—56ல் எண் 13 அருணசல ஆச்சாரி தெரு, சென்னை 5-ல நடைபெற்றக் கூட்டத்தில். தோழர் கண்ணதாசனைத் தலைவராகவும், தோழர்கள் கா அப்பாதுரை, அ பொ. அரசு எம். சி. ஆகியோரைத் துணைத் தலைவர்களாவும், தோழர்கள் என். கிருட்டிணன், இரா. மணிவேர்தன் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளராகவும், தோழியர் அலமேலு அப்பாதுரையைப் பொருளாளராகவும் கொண்டு மேற்படி மன்றம் துவக்கப்பட்டது. மன்ற நிர்வாக உறுப்பினர்களாகத் தோழர்கள் மா. மோகன், வி. எஸ் நடராசன், சி. எ முகிலன், எஸ் ரங்கநாதன், ஜி. பி பாண்டியன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. வி. க. நினைவு விழா

22—1—56 மாலை, 'தூத்துக்குடி திரு. வி. க மன்றச் சார்பில். திரு. வி. க நினைவு விழா நடைபெற்றது. விழாவில் தோழர் கா அப்பாதுரை அவர்கள் கலந்துகொண்டார். மன்றத் தோழர்கள் தோழர் அப்பாதுரை அவர்களை ஊர் நிலையத்தில் வந்திருந்து வரவேற்றனர்; விழாப் பொதுக்கூட்டத்தின்போது வரவேற்பு இதழ்கள் வாசித்து மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவித்தனர் திரு வி. க. மன்றம், நகர தி. மு. கழகம், மஜீத் மன்றம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், வடக்கூர் தி. மு. கழகம், பன்னீர் செல்வம் கழகம், வ உ சி கழகம், ஆகிய பல்வேறு கிளைக் கழகங்கள், மன்றத் தோழர்கள் அப்பாதுரை அவர்களுடன் அளவளாவினர். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் அப்பாதுரை அவர்கள் அரியதொரு கருத்துரை வழங்கினார்.

தம்மை அன்புடன் வரவேற்று அளவளாவி மகிழ்வித்த மன்றங்கள், கழகங்களின் செயலாளர்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தனிப்பட்ட முறையில் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார்.

துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றம்

22—1—56 மாலை 6 மணிக்கு துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றப் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றபோது தோழர் ஜெ ரா கிருஷ்ணமூர்த்தியைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது கூட்ட இறுதியில் முக்கியத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

குடந்தை கலைக் கழகம்

5—2—56ல் குடந்தை கலைக் கழகத்தின் ஆண்டு நிறைவுக் கூட்டம் திரு. டி ஆர். மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, என். சொக்கலிங்கம் அவர்களை தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. முக்கியத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

இராமானுசம்புதூர் ஆதிதிராவிட நல உரிமை சங்கம்

29—1—56 மாலை 6 மணிக்கு' மேற்படி சங்க பம்பாய் கிளையின் செயற்குழுக் கூட்டம் பம்பாய்—தாராவி அமினுமென்சன் எண். 13 இல்லத்தில் ஆர். வி. எஸ். நயினார் தலைமையில் நடைபெற்றது. பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

வ. ஆ. மாவட்ட கைத்தறி துணி வர்த்தகர் மாநாடு

2—2—56 அன்று பகல் 12-மணிக்கு. வடார்க்காடு மாவட்ட வர்த்தகர் சங்க மாநாடு குடியாத்தம் திருமகள் மில்லில் தோழர் வே. ச. விசுவநாதம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் திரு. ஏகாம்பரம், கா. அ சண்முகம் ஆகியோர் 'ரிபேட்' திட்டத்தை மீண்டும் அரசாங்கம் தொடர்ந்து நடத்தவேண்டிய அவசியத்தை விளக்கிப் பேசினர். கூட்டத்தில் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடசென்னை முடிதிருத்துவோர் சங்கம்

2—2—56ல் தோழர் சிங்காரம் தலைமையில் நடைபெற்ற வட சென்னை முடிதிருத்துவோர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில், பிப். 20-ந் தேதி நடைபெறவிருக்கும் கடையடைப்பின்போது முடிதிருத்தகக் கடைக்காரர்கள் தங்கள் கடைகளை மூடி ஆதரிக்கவேண்டும் என்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'அரக்கு மாளிகை' நாடகம்

18—1—56 இரவு வடார்க்காடு மாவட்டம் போளூர் வட்டத்தைச் சேர்ந்த புதூரில் தி. மு. கழகத் தோழர்களால் தோழர் போளூர் சுப்பிரமணியம் தலைமையில 'அரக்கு மாளிகை' நாடகம் நடைபெற்றது. நாடகத்தில் நடித்த தோழர்களை தலைவர் பாராட்டிப் பேசினார் ஏராளமான மக்கள் நாடகத்தைக் கண்டு களித்தனர்

வள்ளுவர் விழா

உறந்தைராயன் குடிக்காடு ஊர் நலன் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், 16—1—56-ல், டில்லி தோழர் வ. வீராசாமி எம். பி. தலைமையில் வள்ளுவர் விழா, சிறப்பாகக் கொண்டாடப்பட்டது, தோழர் மதிவாணன் படத்திறப்பாற்றினார் தோழர்கள் கு. இலக்குவன், மு இரா முருகையன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், இறுதியில் முக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன

சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

28—1—56 மாலை 6 மணிக்கு, மேற்படி கழகத்தின் 23-ம் ஆண்டு விழா, கழக மனையில், திரு. என். கோபால மேனன் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் தி. வீ. இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு சி. எம் பரிபூரணம் பல கழகங்கள், தனிப்பட்டோரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்த பின், தோழர் இரா. சக்ரவர்த்தி கழக ஆண்டறிக்கை வாசித்தார். பின்னர், சென்னை சர். தியாகராயர் கல்லூரி பொருளாதாரத் துறைப் பேராசிரியர் திரு. சண்முகசுந்தரம் 'நலம்தரும் நாடு' என்பது பற்றியும், மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனார் 'தமிழன், அன்றும்—இன்றும்' என்பது பற்றியும் சிறப்புறச் சொற்பொழிவாற்றினர்.

29—1—56 மாலையில் மேற்படி கழகப் பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. 'செஸ்' போட்டி மாறுவேடப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. பின்னர், 1956-ம் ஆண்டிற்கு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சங்கம்

கடலூர், பிப். 1—

22—1—56 இரவு 9 மணிக்கு இவ்வூர் சங்கப் பணி மனையில் தோழர் எ சின்னத்தம்பி தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில், 'செல்வ விநாயகர் சர்வீஸ்,' 'முருகன் டிரான்ஸ்போர்ட்,' 'டி. டி. எஸ் பஸ்', 'கணேசன் பஸ் சர்வீஸ்' ஆகியநிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆண்டிற்கு நான்கு மாதச் சம்பளம் 'போனஸ்' கொடுக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றம்

14—1—56 இரவு 8 மணிக்கு, கடையநல்லூர் முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ப புகழேந்தி தலைமையில் நடைபெற்றபோது, 23—11—55ல் நடைபெற்றப் பொதுக் கூட்ட வரவு - செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், துணைச் செயலாளர் தோழர் ச. குருசாமி, உறுப்பினர் தோழர் சு. ராமநாதன் ஆகியோரது விலகலை ஏற்றுக்கொண்டும், அன்னாரது தொண்டுக்குப் பாராட்டுத் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கற்களையும் காய்கறிகளையும் வீசியெறிந்தனர்

அல்ஜீரியா, பிப். 6—

அல்ஜீரியாவிலுள்ள தேசியவாதிகள் முழுச் சுதந்திரம் கோருகின்றனர்.

கட்டுப்பாடாக உள்ள 50,000 'விடுதலைப் படையினர்' ஆயுதமேந்தியவர்களாக அல்ஜீரியா மலைப்பிரதேசத்தில் 2 இலட்சம் பிரெஞ்சுத் துருப்புக்களை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

போராட்டத்தின் நிலைமை பிரான்சுக்குக் கவலையைக் கொடுப்பதாக உள்ளதால், இராணுவ நிலைமையை நேரில் தெரிந்துகொள்ள பிரெஞ்சு முதலமைச்சர் அல்ஜீரியா நாட்டிற்குச் சென்றுள்ளார்

அவர் இன்று, நகரின் இடைப்பகுதியிலுள்ள, 'போர் நினைவுச் சின்ன'த்திற்குச் சென்றபோது அவர் மீது, அல்ஜீரியாவில் குடியேறியுள்ள பிரெஞ்சு நாட்டு இளைஞர்களும், பெண்களும் அழுகிய காய்கறிகளையும், கற்களையும் வீசி, வசைமாரி பொழிந்தனராம்

அல்ஜீரியாவில் 10 இலட்சம் பிரெஞ்சுக்காரர்கள் குடியேறியுள்ளனர்

'பிரெஞ்சு உரிமைகளை விட்டுக் கொடுக்கப் போவதில்லை' என பிரதமர் மாலட் அங்குள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு உறுதியளிப்பாராம்; தேசியவாதிகளை எவ்விதத்திலும் திருப்திபடுத்துவது தன்னுடைய நோக்கமல்லவென்றும் அவர் கூறுவாராம்.

அல்ஜீரியாவில் வாழும் 90 இலட்சம் முகமதியர்களுக்கும் அங்கு வாழும் ஐரோப்பியரைப் போலவே சம உரிமை உண்டென்றும் அவர் எடுத்துக் கூறுவாராம்.

அமைச்சர் விலகினார்

அல்ஜீரிய அமைச்சர் ஜெனரல் ஜார்ஜஸ் கட்ரூ தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டாராம்.

பிப். 20: பொது வேலைநிறுத்தம்

கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு கமிட்டி வேண்டுகோள்

"தமிழ் மாகாணம் அமைக்கப்படவேண்டுமென்று நாம் பல ஆண்டுகளாக கிளர்ச்சி செய்தோம். இதன் விளைவாக மாநிலப் புனரமைப்புக் குழு, 'சென்னை மாநிலம்' என்ற பெயரில் தமிழ் மாகாணம், அமைக்கும்படி இந்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்தது; இந்திய சர்க்காரும் இதை ஏற்றுக்கொண்டு அறிக்கை வெளியிட்டது. ஆனால் சமீபத்தில் மாநிலங்களின் எல்லைகள் குறித்து ஏற்பட்ட தகராறுகளைக் காரணமாகக் காட்டி, மொழிவழி மாநிலங்கள் அமைப்பது என்ற கொள்கையை நிராகரிப்பதற்கும், அதற்குப் பதிலாக பல மொழிகள் பேசும் மக்களையும், அவர்களது மாநிலங்களையும் ஒன்றாகச் சேர்த்து 'தட்சிணப் பிரதேசம்' அமைக்கக் காங்கிரஸ் சர்க்கார் தற்பொழுது தீவிரமாக முயற்சி செய்து வருகின்றது.

"இந்தத் 'தட்சிணப் பிரதேசம்' என்பது தமிழ் மக்களுக்கும், கேரள மக்களுக்கும், கர்நாடக மக்களுக்கும் பாதகம் உண்டாக்கும். ஏனெனில், 'தமிழ் மாநிலம்' அமைக்கப்பட்டால்தான், தமிழ் மக்கள் வளர்ச்சியடைய முடியும்; தமிழ் அரசாங்க மொழியாக மாறும்; சர்க்காரின் இலாகாக்கள் தமிழில் இயங்க முடியும்; உயர்ந்த கல்வி உள்பட சகல கல்வியும் நம் பள்ளிகளில், கலாசாலைகளில், கல்லூரிகளில் தமிழில் போதிக்கப்படும். வாழ்க்கையின் சகல துறைகளிலும் தமிழ் மொழி உபயோகிக்கப்படும். இதன் மூலம்தான் தமிழ் மக்கள் அனைவரும் அரசியல், பொருளாதாரம், தொழில், கலை முதலிய சகல துறைகளிலும் சுலபமாகப் பங்கெடுத்துக்கொண்டு முன்னேறுவது சாத்யமாகும்.

"இதேபோல், கேரள மாநிலமும், கர்நாடக மாநிலமும் அமைக்கப்பட்டால்தான் நம் சகோதரர்களான கேரள மக்களும், கர்நாடக மக்களும் முன்னேற முடியும்.

"ஆகவே, 'தட்சிணப் பிரதேசம்' அமைக்கக் காங்கிரஸ் சர்க்கார் செய்யும் முயற்சியைக் முறியடிப்பது நம் கடமையாகும். அத்துடன், இந்திய சர்க்கார் ஏற்கனவே அறிவித்திருக்கும் முடிவுப்படி, தமிழ் மாநிலத்தை அமைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யும்படி வற்புறுத்தி, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யவேண்டுமென்று நாங்கள் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் கமிட்டியின் சார்பில் தோழர்கள் ப. ஜீவானந்தமும், மணலி கந்தசாமியும், சென்னையில் 27—1—56ல் நடந்த பல கட்சிகளின் பிரதிநிதிகள், கூட்டத்தில் கலந்துகொண்டு, அக்கூட்டத்தில் 'தட்சிணப் பிரதேச' முயற்சியை கண்டித்தும், தமிழ் மாநிலம் உடனடியாக அமைக்கப்படுவதை உத்திரவாதம் செய்யும் முயற்சியில் கிளர்ச்சி நடத்தவேண்டிய அவசியத்தையும், எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்தையும் விளக்கிக் கூறினார்கள். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தட்சிணப் பிரதேச அமைப்பு முயற்சியை வன்மையாக எதிர்த்திருக்கிறது. தமிழ் மாநிலம் உடனடியாக அமைக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது. எல்லைப் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்க்க எல்லைக் கமிஷன் அமைக்கப்படவேண்டுமென்று கோரியிருக்கிறது இந்த விஷயங்களில் கம்யூனிஸ்டு கட்சிக்குப் பூரண உடன்பாடு உண்டு.

"தட்சிணப் பிரதேச அமைப்பு முயற்சியை எதிர்த்தும், உடனடியாக தமிழ் மாநிலத்தை அமைக்கும்படி வற்புறுத்தவும், எல்லைப் பிரச்சினைகளில் நியாயமான தீர்வு காண எல்லைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரிப்பதற்காகவும், தமிழ் மக்கள் அனைவரும் 1956 பிப்ரவரி திங்கள் 20-ம் தேதியன்று பொதுவேலை நிறுத்தம் (ஹர்த்தால்) நடத்த வேண்டுமென்று மேற்கூறிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவை கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரிக்கிறது.

"எனவே, பிப். 20-ந் தேதியன்று தமிழ் மக்கள் அனைவரும் கட்டுப்பாடுடனும், அமைதியாகவும் 'ஹர்த்தால்' மேற்கொள்ள வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி வேண்டிக்கொள்ளுகிறது.

நேருவின் அக்கிரமத் தீர்ப்பு

தமிழ்நாடெங்கணும் கண்டனம்

★

கொண்டயம்பட்டி

26—1—56-ல், இங்கு, தோழர் ந. பெ. பெ. பழனிச்சாமி தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும், ஊர்வலமும், கடையடைப்பும் நடைபெற்றது. நேருவின் தீர்ப்பைக் கண்டித்துத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கல்லக்குடி

23—1—56-ல், தோழர் வரதராசன் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் செங்குட்டுவன், அதம்புசாமி, கே. எ குமரவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எட்டயபுரம்

25—1—56-ல், இங்கு, சர்வ கட்சியினர் சார்பில், கடையடைப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அன்று மாலை முக்கிய வீதி வழியாக ஊர்வலமும், மறுநாள் இரவு 8 மணிக்கு, காங்கிரஸ், கம்யூனிஸ்டு ஆகிய இரு கட்சியினரையும் தவிர்த்து பிற கட்சியினர் சார்பில் பொதுக்கூட்டமும் நடைபெற்று, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பள்ளிகொண்டார் (வ. ஆ.)

31—1—56ல், இவ்வூரில் பூரண கடையடைப்புச் செய்யப்பட்டது; பள்ளிகளும், பஞ்சாயத்துபோர்டு, மற்றும் எல்லா அலுவலகங்களும் மூடப்பட்டன. அன்று காலை, மறியலில் கலந்துகொண்ட தோழர் வி ஆர். வேணுகோபாலை (தி.மு க.) போலீசார் கைது செய்து, 4 மணி நேரம் காவலில் வைத்திருந்து பின்னர் விடுதலை செய்தனர். மாலை 6 மணிக்கு சர்வ கட்சிச் சார்பில் திரு. எம். துரைசாமி தலைமையில் நடைபெற்றக் கண்டனப் பொதுக் பொதுக்கூட்டத்தில் சர்வ கட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

அறந்தாங்கி

2—2—56-ல் அறந்தாங்கி தி. மு. கழகச் சார்பில், தோழர் கா. மாரிமுத்து தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம், நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றினார். இறுதியில் கண்டனத் தீர்மானமும், பிப். 20-ல் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவும் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்ணாவின் ஆய்வுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டோம்? சீனத்தில் இருக்கும்போது நம்மைச் சுற்றி எவ்வளவு செல்வங்கள் இருந்தன? — இப்போது எவ்வளவு சீரழிவு இருக்கிறது — என்று எண்ணி நொந்துகொண்டிருக்கிறான் சியாங்கே - ஷேக்!

“பண்டிதர்மீது உண்மையில் அன்புகொண்டவர்கள் - ‘பண்டிதர் உட்கார்ந்திருக்கும் பீடம் ஆடக்கூடாது’ என்று அக்கறை கொண்டவர்கள் - ‘இப்போது எவ்வளவு செல்வாக்கோடு வாழ்கிறாரோ அந்த அளவு செல்வாக்கோடு அவர் வாழ்நாள் பூராவும் இருக்க வேண்டும்’ என்று உண்மையாகவே விரும்பும் காங்கிரஸ்காரர்கள்; ‘பண்டித நேரு அவர்களே! நீங்கள்தான் இந்தியாவின் முடிசூடா மன்னராக நெடுங்காலத்திற்கு இருக்க வேண்டும் என்பது எங்களது இதயகீதம்; அண்ணாதுரை, சியாங்கே - ஷேக்கைக் கவனப்படுத்துகிறார் — அச்சமாயிருக்கிறது! உங்களை நாங்கள் தேவதேவனைத் தொழுவது போல் தொழுது கேட்கிறோம் —தேவிகுளம், பீர்மேடு விவகாரத்திற்கு முடிவு காண உடன் வாக்கெடுப்பு நடத்துங்கள்,’—என்று தந்தி அடிக்க வேண்டும்!

“காங்கிரஸ் காரர்கள் அப்படிச் செய்வார்களா? காங்கிரஸ்காரர்கள் இருந்தால் செய்யக்கூடும்; ஆனால், இப்போது யாருமில்லை; காங்கிரசில் சில பேர் இருக்கிறார்கள்—காங்கிரஸ்காரர்கள் இல்லை; வெறும் சொல்லலங்காரத்திற்காக நான் இதைச் சொல்லவில்லை; காங்கிரஸ்காரர்களுக்கும்—காங்கிரசில் சில பேர் இருப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு!

“காங்கிரசில் இன்று ‘லைசென்ஸ்’ பெறவேண்டுமென்று எண்ணுபவர்கள் இருக்கிறார்கள்; ‘பிளாக்மார்க்கெட்’ செய்யும்போது அதிகாரிகளிடம் பிடிபடாமலிருக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் இருக்கிறார்கள்; ஜில்லா போர்டுக்காக சிலர் இருக்கிறார்கள்; நகராட்சி மன்றத்திற்காகச் சிலர் இருக்கிறார்கள்; சட்ட சபைக்காகச் சிலர் இருக்கிறார்கள்; உள்ள மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்காகச் சிலர் இருக்கிறார்கள்; ‘தங்களுக்குக் கிடைக்காதா அந்தப் பதவி?’ என்று ஏங்கிக் கிடப்பவர்கள் இருக்கிறார்கள்; இப்படிப்பட்டவர்கள்தான் காங்கிரசிலே இன்று இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் எல்லாம், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டதும் காங்கிரசிலிருந்து வெளியேறி சிலர் கம்யூனிஸ்டுகளாகவும், சோஷலிஸ்டுகளாகவும், சிலர் பிரஜா-சோஷலிஸ்டுகளாகவும், தமிழரசுக் கழகத்தவராகவும், மாறிவிட்டார்கள்; உண்மையான காங்கிரசார் எல்லாம் வெளியே வந்துவிட்டார்கள். இன்று அங்கு உண்மையான காங்கிரஸ்காரர் எவரேனும் இருந்தால் பண்டித நேருவுக்குத் தந்தியடிக்கவேண்டும்—நான் கூறியதுபோல, நீதியை நிலை நாட்டும்படி—நேர்மையாக நடந்து கொள்ளும்படி!

“நேரு பண்டிதர் இழைத்த அநீதியை நாங்கள் எல்லாம் எதிர்க்கிறோம் என்றால்—தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, பி சோ. கட்சி, தி. மு கழகம் இத்தனையும் சேர்ந்து எதிர்க்கின்றன என்றால்—இங்குள்ள மந்திரிகள் ஏதோ புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு, ‘யார் தெரியுமா எதிர்க்கிறார்கள்? காங்கிரஸை எதிர்ப்பவர்கள் இப்போது எதிர்க்கிறார்கள்’—என்று பேசுகிறார்கள்.

“பின் யார் எதிர்ப்பார்கள்? காங்கிரசை எதிர்ப்பவர்கள்தான் எதிர்ப்பார்கள்! பின் என்ன—சர்க்கார் நட்டு வைத்திருக்கும் தந்திக் கம்பங்களா பேசும்? போட்டு வைத்திருக்கிற இரயில் தண்டவாளங்களா பேசும்? எடை பார்ப்பது, தராசில் வைத்துத்தானே? ஒரு பொருளை தராசில் வைத்து எடை போட்டு, ‘இது குறைகிறது’ என்று கூறினால், ‘ஓ! இது தராசில் போட்டுப் பார்த்துச் சொல்கிறார்கள்’ என்று கூறினால், அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான பேச்சாகும்? எடையைத் ‘தராசு’ காட்டாமல், கடையிலிருக்கும் திண்ணையும், படிக்கட்டுமா காட்டும்?

“காங்கிரசை எதிர்ப்பவர்கள்தான், சர்க்கார் இழைக்கிற அநீதியை—புரிகிற கொடுமையைக் கண்டிப்பார்கள்; எடுத்துரைப்பார்கள்.

“மந்திரிகளாவது பேசுவார்களா—‘நேரு சர்க்கார் இழைத்த அநீதியைக் கண்டித்து,’ என்றால், அதுவும் இல்லை!

“காங்கிரசில் சிலருக்கு ஆசை இருக்கிறது—‘பேசலாம்’ என்று! ஆனால், ‘கட்சிக் கட்டுப்பாட்டை மீறாதே! காங்கிரஸ் கண்ணியத்தைக் குலைக்காதே! தேவிகுளம், பீர்மேடு வேண்டுமா? இரகசியமாகக் காமராசரிடம் சொல்லு;’—என்று மேலிடம் உத்தரவு போடுகிறது. அவர்களும் காமராசரிடத்தில் சென்று, ‘இந்தக் கிராமமணியாரும், அண்ணாதுரையும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள்,’ என்றுகூற, ‘ஆமாம், ஆமாம்; நானும் பத்திரிகையில் பார்த்தேன்,’ என்று காமராசர் கூற, இதுதான் முடிகிறதே தவிர; எந்தக் காங்கிரஸ்காரர் இன்று தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து கண்டித்துப் பேசுகிறார்கள்?

“கண்ணியவான்களாயிருந்தால், ‘பேச நினைக்கிற காங்கிரசாரே! எங்கள் அணிக்கு வாருங்கள்’—என்று அழைக்கிறேன்; நீங்கள் மீண்டும் கதர் கட்டிக்கொண்டு அங்கு செல்லலாம்; வைராட்டினமே தாரக மந்திரம் எனக் கொள்ளலாம்; ‘திராவிட நாடு தீது’—பேசுங்கள்; ‘திராவிடர் இயக்கத்தில் இருப்பவர்கள் அரக்கர்கள்’—சொல்லுங்கள்; ஆனால், ‘தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே’ என்று மட்டுமேனும் சொல்லுவதற்கு உங்களுக்குத் திராணி, ரோஷம், சூடு சொரனை, தன்மானம், நாட்டுப்பற்று மொழிப்பற்று உண்டா?

“நீங்கள்—காங்கிரசார் அப்படிச் சொன்னால்—அநீதியைக் கண்டித்தால், நேரு, கண்களை அகலத் திறந்து, ‘தமிழர்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள்’ என்ற பேருண்மையைத் தெரிந்துகொண்டு, அறிக்கை மூலம் தெரிவிப்பார்—‘தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே’ என்று! காங்கிரசார் சொல்வதற்குத் தயாரா?

“இதைக் கேட்டுவிட்டுப் போவதற்குத்தான் நகரின் பல பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்துகிறோமே தவிர, ‘தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்குத்தான்’ என்று வாதிடுவதற்காக அல்ல; பிரச்சினை, வாதாட்டத்திற்கு அப்பாற்பட்ட கட்டத்திற்கு வந்துவிட்டது; வாதிடும் கட்டம் முடிந்துவிட்டது. இப்போது, பிரச்சினை, போராட்ட காலத்திலிருக்கிறது.

“போராட்டம் பற்றி முடிவெடுக்கத்தான் கடந்த 27-ந் தேதி அன்று, பல கட்சியினரும் ஒன்று கூடி திட்டம் வகுத்திருக்கின்றனர்.

“பிரச்சினை எத்தனை பயங்கரமானதாயிருந்தால் — முக்கியமானதாயிருந்தால் இத்தனை கட்சிக்காரர்களும் ஒன்றுபட்டிருப்பார்கள் எனபதை எண்ணிப்பாருங்கள்

“சிவஞானமும்—நாமும் ஒன்றுபடக்கூடியவர்களா? அந்தோணிப்பிள்ளையும்—நாமும்— கம்யூனிஸ்டுகளும் ஒன்றுபடக்கூடியவர்களா?

“‘நமது கொள்கைகள் எல்லாம் பைத்தியக்காரத்தனமானவை’ என்று தமிழரசுக் கழகத்தவர் சொல்ல, ‘அவர்கள் கூறுவதெல்லாம், ஏமாற்றுத்தனம்’ என்று நாமும், ‘நம் பாதை தவறானது’ என்று அவர்களும் கூற அவர்களுக்கு மார்வாடி பணம் தருகிறான்’ என்று நாம் கூற, ‘நமக்கு வெள்ளைக்காரன் பணம் தருகிறான்’ என்று அவர்கள் கூற—இப்படியல்லவா ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டிருந்தோம்?

“இவர்கள் அல்லவா ஒன்றுபட்டிருக்கின்றனர், இன்று? இதில் ஈடுபட்டுள்ள தலைவர்களுக்கு இது பெருமை என்பதல்ல—அல்லது, ‘திடீரென இந்தத் தலைவர்கள் எல்லோரும் பெருந்தன்மை பெற்றுவிட்டார்கள்’ என்றும் உங்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை; பிரச்சினை, எல்லோரையும் ஆட்கொண்டுள்ளது; பிரச்சினை, எல்லோருக்கும் சொந்தமாகியிருக்கிறது; அதனால்தான், பலரும், கட்சி வேறுபாடுகளை — முரண்பாடுகளை மறந்து, தமிழருக்கு உரித்தான தமிழ் வட்டங்களைத் தமிழ் நாட்டிற்கு வாங்கித் தருவதற்காக ஒன்றுபட்டிருக்கின்றனர்

“இந்த அணிவகுப்பு சாதாரணமானது-சாமானியமானது என்று எண்ண வேண்டாம்.

“இட்லரை ஒழிப்பதற்குத்தானே ஸ்டாலினும்—சர்ச்சிலும் ஒன்றுபட்டாகள்? ஸ்டாலினுடைய சமதர்மத் தத்துவத்தை சர்ச்சில் ஏற்றுக்கொண்டோ, அல்லது சர்ச்சிலுடைய அரசு முறையை ஸ்டாலின் ஏற்றுக்கொண்டோ அல்ல!

“‘இட்லருடைய ஆதிக்கம் உலகத்திற்கே பேராபத்து; இட்லரை அழித்து ஒழிக்கப்படாவிட்டால் உலகில் ஜனநாயகம் அழிக்கப்படும்—மக்கள் சக்தியே சிதறிவிடும்’—என்ற ஆபத்தை உணர்ந்ததால், பொதுஉடமை பேசிய ஸ்டாலினும் — தனியுடைமையை ஆதரித்த சர்ச்சிலும் ஒன்றுபட்டார்கள்!

“அதைப் போலவே, எங்களிலே எவரும் சர்ச்சில், ஸ்டாலின் அளவுக்கு உயர்ந்தவர்கள் அல்ல என்றாலும், வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்தவர் ஒன்றுபட்டிருக்கிறோம் - நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அநீதியைக் களைவதற்காக!

“பண்டிதரின் நேர்மையிலும், நாணயத்திலும் இன்னும் நம்பிக்கை வைத்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் இருந்தால், அவர்கள், இந்தப் பெரிய அணிவகுப்பை—ஒற்றுமை உணர்வைக் கண்ட பிறகேனும்—பார்த்தபிறகேனும், காங்கிரசில் இன்று இருந்தாலும் நாளையும் இருக்கலாம் என்பதால், நாட்டுப் பற்றுக்கொண்டு, எங்களோடு சேர்ந்து அநீதியை எதிர்த்துப் போராடவரவேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

“குறிப்பாகவும் — சிறப்பாகவும் பார்ப்பன நண்பர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

“‘போராட்டம் என்கிறாய்; பார்ப்பனர்களை அழைக்கிறாயே,’ —என்று கேட்கலாம், சிலர்;

“போராட்டம் என்றால், இது அடிதடிப் போராட்டம் அல்ல; அரிவாள் தூக்கித் தாக்குகிற போராட்டம் அல்ல; அப்படிப்பட்ட போராட்டமானால், நானே கூறுவேன் —‘பார்ப்பன நண்பர்களே! நீங்கள் இப்போது வரவேண்டாம்; போராட்டம் முடிந்தபின் வாருங்கள், போதும்’—என்று! ஆனால், இப்போது அறிவுக்கு அறிவு மோதுகிற போராட்டம்தான் நடைபெறப்போகிறது. அன்பு அலையாலே பண்டித நேருவின் உள்ளத்தைத் தாக்க வேண்டும்; தமிழர்களை ஒன்றுபடுத்தவேண்டும்; அதற்காகத்தான் அவர்களை அழைக்கிறேன்.

‘ஹர்த்தால்’

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

★

“அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க ‘ஹர்த்தாலே’ சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது.”

—1919-ல் ‘யங் இந்தியா’வில்.

தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

9—2—56 வியாழன் மாலை 6 மணிக்கு

சென்னை—பெரம்பூர்

‘கான்ரான்ஸ்மித்’ நகர் மைதானத்தில்

வ. கிருஷ்ணசாமி

தலைமையில்

மு. கருணாநிதி

பேசுவார்

—24-வது வட்ட தி. மு. கழகம்

குன்றத்தூரில் துணைப் பொதுச்செயலாளர்

குன்றத்தூர் கைத்தறி பாவு துவைத்தல் தொழிலாளர் சங்க திறப்பு விழா, பெரிய தெருவில் 9—2—56 மாலை 6 மணிக்கு நடைபெறும். தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன், முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

பிப். 9 : மன்னார்குடி
10 : திருவாரூர்
11 : தஞ்சாவூர்
12 : மதுரை
13 : பாலக்கோடு
14 : பர்கூர்
16 : சென்னை
17 : போடிநாயக்கனூர்
19 : கும்பகோணம்

ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில்

சர்வகட்சி கூட்டணி பொதுக் கூட்டங்கள்

தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினை பற்றி சர்வகட்சி கூட்டணி சார்பில், ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்:—

பிப். 14 : மாங்காடு
15 : ஸ்ரீபெரும்புதூர்
16 : திருமழிசை
17 : ஆவடி
18 : குன்றத்தூர்
19 : பூவிருந்தவல்லி

சர்வகட்சி கூட்டணியில் சோஷலிஸ்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம் ஆகியவை சேர்ந்துள்ளன.

சேலம் மாவட்ட தி.மு. கழக பிரதிநிதிகளுக்கு

சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் 15—2—56 மாலை 3 மணிக்கு, சேலம் மத்திய பாங்க் சத்திரத்தில் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் எல்லோரும் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக்கோள்ளப்படுகின்றனர்.

பொருள் :— 1. பொதுக்குழுவும், பிப்ரவரி 20-ம்,
2. இதர விஷயங்கள்

சென்னை—3-வது வட்ட தி.மு.க, செயற்குழு உறுப்பினர்கட்கு

9—2—56 வியாழன் மாலை 7 மணிக்கு, சென்னை 3-வது வட்ட தி. மு. கழகக் கிளைக் கழகக் கட்டிடத்தில் கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். வரவு-செலவு கணக்குகள் சரி பார்த்தல், தி மு. கழகப் பொதுக் குழு முடிவுகள் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்படும். அத்துடன் 9—2—56-க்குள் செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் கழக வளர்ச்சி நிதியை ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொதுச்செயலாளர்

கழகத் தோழர்களைக் கண்டு பேசி, பிப்ரவரி 20—பொது வேலை நிறுத்தத்துக்கான அமைதி கண்ணியம், கட்டுப்பாடு முறை பற்றி எடுத்துக் கூற, பொதுச்செயலாளர், பிப். 12, 13, 14, 15 ஆகிய நாட்களில், தமிழகத்தில் (மோட்டார் மூலம்) சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்திருக்கிறார்.

12-ந் தேதி மாலை, காஞ்சீபுரம் பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு கிளம்பி, வாலாஜாபாத், செங்கற்பட்டு, மதுராந்தகம் திண்டிவனம், விழுப்புரம் மார்க்கமாகக் கிளம்பி, தூத்துக்குடி வரை சென்று திரும்புகாலில், கோவை, சேலம், வடாற்காடு மாவட்டப் பகுதிகள் வழியாக வர திட்டமிடப்பட்டிருக்கிறது.

விரிவான திட்டம் நாளை வரும்.

—தி. மு. க. தலைமை நிலையம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.